**பஸ்வண்டிக்குப் பதிலாக இன்னுமொரு பஸ்வண்டியைப் பயன்படுத்துதல் ( தேவையான ஆவணங்கள்)**

மேலே குறிப்பிட்ட ஆவணங்களில் இலக்கம் 2 (எ) தவிர்ந்த ஏனைய ஆவணங்கள் தேவைப்படும். இதற்கு மேலதிகமாக பின்வரும் ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

I இறுதியாக சேவைக்குட்படுத்தப்பட்ட ஒழுங்குமுறையிலான 03 மாத காலத்துக்குரிய சேவை அறிக்கை

II காலத்தைப் பெற்றுக்கொண்ட கடிதம் (60- 90 நாட்கள்)

III வேறு மாகாண சபையில் சேவைக்குட்படுத்திய பஸ்வண்டியாயின் அந்த மாகாண சபைக்குரிய அதிகார சபையினால் வழங்கப்பட்ட விடுவிப்புக் கடிதம்.

IV மாகாணங்களுக்கு இடையே சேவைக்கு உட்படுத்தப்பட்ட பஸ்வண்டியாயின் குறித்த தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக் கொண்ட விடுவிப்புக் கடிதம்

V பயண ஆரம்பம் மற்றும் பயண முடிவு இரண்டு மாகாணங்களக்கிடையேயாயின் மாத்திரம் குறித்த இரண்டு மாகாண சபைகளினாலும் விடுவிக்கப்பட்ட இரண்டு கடிதங்கள்

VI கடந்த ஆண்டின் உரிமப் பத்திரம்

VII அத்தகைய உரிமப்பத்திரம் பயணிகள் போக்குவரத்தின் கீழ் பெற்றுக் கொள்ளாத உரிமப்பத்திரமாயின் பஸ்வண்டி பதிவு செய்த தினந் தொடக்கம் சமர்ப்பிக்கின்ற ஆண்டு வரை முறையே உரிமப்பத்திரம் தொடர்பான விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்றை மாகாண மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் ∴ உரிய பிரதேச செயலகத்திடம் இருந்து பெற்றுக் கொண்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

VIII அத்தகைய ஆவணமொன்றை சமரப்பிக்க முடியாத சந்தர்ப்பத்தில் பதிவு செய்த தினந்தொடக்கம் உரிய வீதி அனுமதிப்பத்திரக் கட்டணத் தண்டனைத் தொகையுடன் செலுத்துதல் வேண்டும்.

IX தொடர்ச்சியாக பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட்ட பஸ்வண்டி எனின் உரிய பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையிடம் இருந்து பெற்றுக் கொண்ட விடுவிப்புக் கடிதம் மற்றும் இறுதியாக (அப்போதைய ஆண்டுக்காக ) பெற்றுக் கொண்ட உரிமப் பத்திரம் போதுமானதாகும்.

X பஸ்வண்டியை பிரதான அலுவலகத்தில் முன்னிலைப்படுத்துதல் வேண்டும்

XI.அற்றோணி தத்துவம் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

XII சமர்ப்பிக்கப்படுகின்ற அனைத்து ஆவணங்களும் உண்மையானதும் மற்றும் சரியானதும் என உறுதிப்படுத்திய சத்தியக் கடதாசி.